

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூர் தொகுதி பிரான்மலைன ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளி 136 வது ஆண்டு விழாவில் பங்கேற்ற கூட்டுறவுத் துறை அமைச்சர் கே ஆர். பெரிய கருப்பன் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் ஆகியோருடன் பள்ளி தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதி ரூ. 6.50 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்ட உள்ள பயணிகள் நிழற்குடை அடிக்கல் நாட்டுதல் நிகழ்வினை மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் துவக்கி வைத்தார். உடன் கூடுதல் மாவட்ட ஆட்சியர் திருமதி ஐஸ்வர்யா,மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் /எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர்,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் பை.மூ.ராமஜெயம், திருச்செந்தூர் நகர்மன்ற தலைவர் திருமதி சிவ ஆனந்தி ரமேஷ்,ஒன்றிய செயலாளர் ஏ.பி ரமேஷ்,நகரச் செயலாளர் வாள் சுடலை, நகர் மன்ற உறுப்பினர்கள் 16வது வார்டு ஆனந்த்,ரேவதி கோமதிநாயகம், முத்து ஜெயந்தி,வழக்கறிஞர் கிருபாகரன் வி.பி.ஆனந்தன்,கபடி கந்தன் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




சமூக நலத்துறை சார்பில் 136 பயனாளிகளுக்கு 1.26 கோடி மதிப்பிலான தாலிக்கு தங்கத்தை பால்வளத்துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன் வழங்கினார். இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சமூக நலத்துறை சார்பில் தாலிக்கு தங்கம் வழங்கும் நிகழ்ச்சி மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன் தலைமையில் நடைபெற்றது. இதில் பால்வளத்துறை மற்றும் கிராம தொழில் வாரிய துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் கலந்து கொண்டு 136 பயனாளிகளுக்கு 1.26 கோடி மதிப்பிலான தாலிக்கு தங்கம் வழங்கினார்.இந்த நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளர்,சட்டப் பேரவை உறுப்பினர் காதர் பாட்ஷா முத்துராமலிங்கம்,பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், நகர் மன்ற தலைவர் ஆர்.கே. கார்மேகம் துணைத் தலைவர் பிரவீன் தங்கம் மற்றும் சமூக நலத்துறை அலுவலம் தேன்மொழி மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# தூத்துக்குடி மாநகராட்சியில் கணினி பட்டா பெறுவதற்கான மனுக்கள்!

## அமைச்சர் பி.கீதாஜீவன் அறிவிப்பு!

தூத்துக்குடி, பிப்.6-

தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் அமைச்சர் கீதா ஜீவன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தூத்துக்குடி மாநகராட்சி பகுதிகளில் கிரைய பத்திரம் வைத்திருந்து குடியிருந்து வரும் குடியிருப்புதாரர்கள் மற்றும் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்ட பட்டா வைத்திருக்கும் இதுவரை



கணினி பட்டா பெறாத குடியிருப்புதாரர்கள் கணினி பட்டா பெறுவதற்கான தங்கள் மனுக்களை 09.02.2025 அன்று காலை 10.00

மணியளவில் தூத்துக்குடி டூவிபுரம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி.பி.கீதா ஜீவன், பெற்றுக்கொள்ளவுள்ளார்.

எனவே, கணினி பட்டா பெறுவதற்கான மனுக்கள் வழங்குவோர் கிரையப் பத்திர நகல் அல்லது அரசு வழங்கிய பட்டா மற்றும் ஆதார் கார்டு நகல் ஆகிய ஆவணங்களுடன் கணினி பட்டா பெறுவதற்கு மனுக்களை அளித்திடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### ஒன்றிய அரசு பட்ஜெட்டில் நிதி ஒதுக்குவதில் பாரபட்சம்!

# தமிழ்நாடு வளர்ச்சி அடையக்கூடாது என செயல்படுகிறது பா.ஜ.க. அரசு!

## சேலம் - ஆத்தூரில் அமைச்சர் இ. பெரியசாமி பேட்டி!

திண்டுக்கல், பிப்.6-

ஒன்றிய அரசு பட்ஜெட்டில் தமிழக அரசுக்கு நிதி ஒதுக்குவதில் பாரபட்சம் காட்டுகிறது எனவும் தமிழகம் வளர்ச்சி அடையகூடாது என்ற நோக்கில் பா.ஜ.க. அரசு செயல்படுகிறது எனவும்- தமிழக மக்கள் 2026ம் தேர்தலில் தக்க பாடம் புகட்டுவார்கள் அமைச்சர் இ.பெரியசாமி தெரிவித்துள்ளார்.



திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க. உறுப்பினரும், தி.மு.க. மாநில துணைப் பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான இ.பெரியசாமி பத்திரிக்கையாளர்களிடம் பேட்டி அளித்தார் .

அப்போது அவர் கூறியதாவது மத்திய அரசின் பட்ஜெட்டில் தமிழகம் புறக்கணிக்கப்படுவது குறித்து கேட்டபோது மத்திய அரசு பட்ஜெட்டில் தமிழகம் தொடர்ந்து புறக்கனிக்கப்பட்டு வருகிறது. ஊரகவளர்ச்சித்துறைக்கு லட்சம் கோடிக்கு மேல் நிதி ஒதுக்கப்பட்டு வந்த நிலையில் கழுதை தேய்ந்து கட்டெறுப்பு ஆன கதையாய் தொடர்ந்து 100 நாள் வேலை திட்டத்திற்கான நிதியை குறைத்தபடியே வருகிறார்கள் கடந்த ஆண்டு 86ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்தார்கள்.

கடந்த ஆண்டு நடைபெற்ற தேசிய ஊரக வளர்ச்சி திட்ட பணிக்கான நிதியை 76ஆயிரம் கோடியாக தொடர்ந்து 10ஆயிரம் கோடி, 10ஆயிரம் கோடியாக குறைத்தபடியே வருகிறார்கள். ஊரக வளர்ச்சித்துறைக்கு ஒதுக்கப்படும் நிதியில் மத்தியில் ஆளும் பா.ஜ.க அரசு தமிழகத்திற்கு எந்த ஒரு நிதி அறிவிப்பும் அறிவிக்கவில்லை தமிழ்நாட்டில் நடைபெறும் ஆட்சியை உலகமே திரும்பி பார்க்கிறது. அந்த அளவிற்கு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மற்ற மாநிலங்கள் தமிழகத்தை பார்த்துதான் தங்கள் மாநிலங்களில் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. தமிழகம் தலைசிறந்த மாநிலமாக உருவாகி வருவதை மத்திய அரசால் பொருத்துக்கொள்ள முடியவில்லை அதனால்தான் எந்த ஒரு நிதியையும் ஒதுக்கீடு செய்யவில்லை இருந்தாலும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழக மக்களுக்கு செயல்படுத்த வேண்டிய நலத்திட்டங்களை தொடர்ந்து தடையின்றி செயல்படுத்தி வருகிறார். தமிழகத்திற்கு ரயில்வே திட்டம் மற்றும் சாலை வசதி திட்டம் எதுவும் ஒதுக்கவில்லை.

மதுரையிலும், கோவையிலும் மெட்ரோ ரயில் திட்டத்தை செயல்படுத்த வேண்டுமென்று தமிழக அரசு கோரிக்கை விடுத்தும் அதை மத்திய அரசு பட்ஜெட்டில் அறிவிக்கவில்லை. நிதி ஒதுக்கீட்டில் தமிழக அரசை தொடர்ந்து புறக்கனிப்பதற்கு காரணம் தமிழக அரசும் சரி தமிழக மக்களும் முன்னேறிவிட கூடாது என்று என்னம் அவர்களுக்கு உள்ளது பரந்த மனப்பான்மையுடன் செயல்பட வேண்டிய அவர்களுடைய எண்ணம் (பா.ஜ.க) குறுகிவிட்டது.

ஒன்றிய அரசு நிதியை நிறுத்தினாலும் தினமும் 9லட்சம் பேருக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை திட்டம் மூலம் பணிகளை வழங்கி வருகிறோம். 100 நாள் வேலை திட்டம் என்பது ஏதோ ஒரு வேலை திட்டம் அல்ல முத்தமிழ் அறிஞர் கலைஞரும், அன்னை சோனியாகாந்தி அவர்களும் கிராமப்புற ஏழை மக்களுக்காக செயல்படுத்திய திட்டம் கிராமங்களில் வேலையில்லா தின்டாட்டம் வரக்கூடாது என்ற நோக்கில் செயல்பட்டதால் மத்தியில் காங்கிரஸ் ஆட்சியின் போது கிராமங்களில் வறுமை ஒழிந்தது. ஆனால் இப்போது ஆளும் மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு 100 நாள் வேலை திட்டத்திற்கான நிதியை குறைப்பதன் மூலம் கிராமங்களிலும் வேலையில்லா தின்டாட்டம் உருவாக போகிறது. இந்தியாவில் வாழும் 120 கோடி மக்களுக்காக செயல்படுத்திய இந்த திட்டத்தை மத்தியில் ஆளும் பா.ஜ.க. அரசு பாழாக்கி வருகிறது.

தமிழகத்தில் 80ஆயிரம் கிராமங்கள் உள்ளன 12ஆயிரத்து 525 கிராம ஊராட்சிகள் உள்ளன. இதில் வாழும் கிராம மக்களின் வாழ்வாதாரத்தை மத்திய அரசு கெடுத்து வருகிறது. கிராமம் முன்னேறினால்தான் நாடு முன்னேறும் என்பதை மத்தியில் ஆளும் பா.ஜ.க.அரசு மரந்தவிட்டது.

அதை உணரும் காலம் விரைவில் வரும். இதை கருத்தில் கொண்டுதான் தமிழக முதல்வர் தமிழகத்தில் எவ்வளவு நிதி நெருக்கடி இருந்தாலும் 100 நாள் வேலை திட்டத்தை செயல்படுத்தி வருகிறார். தமிழக மக்கள் மட்டுமின்றி இந்தியாவில் வசிக்கும் கிராம மக்களின் நலனில் அக்கறை இல்லை என்பதை மத்திய அரசின் பட்ஜெட்டில் தெள்ளத்தெளிவாக கூறிவிட்டது என்றார்.

### காரைக்குடியில் வரும் 8ஆம் தேதி - மு.தென்னவன் தலைமையில்

# ஒன்றிய அரசைக் கண்டித்து கண்டனப் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் - எஸ்.எஸ்.பழனி மாணிக்கம் - இரா.மணிமுடி சிறப்புரை!

சிவகங்கை, பிப்.6-

பிப்ரவரி 1ம்தேதி ஒன்றிய அரசு அறிவித்த நிதிநிலை அறிக்கையில் தமிழக அரசு முற்றிலுமாக புறக்கணிக்கப் பட்டது. இத்தகைய ஒன்றிய அரசின் பாரபட்ச போக்கினை கண்டித்து வருகிற 8ம் தேதி சனிக்கிழமை காரைக்குடியில் கண்டண பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. பிப்ரவரி 1ம் தேதி ஒன்றிய அரசு நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்தது.

இதில் தமிழகத்திற்கு எத்தகைய திட்டங்களும் ஒதுக்கப்படவில்லை. முற்றிலுமாக தமிழ் நாடு புறக்கணிக்கப்பட்டுள்ளது.. இத்தகைய ஒன்றிய அரசின் பாரபட்ச போக்கினை கண்டித்து கழக தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் உத்திரவின் பேரில் மாவட்ட தலைநகரங்களில் வருகிற 8ம்தேதி கண்டன பொதுக் கூட்டம் நடைபெறுகிறது.

இதில் சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் மாவட்ட தி.மு.க மற்றும் காரைக்குடி மாநகர கழகத்தின் சார்பில் 8,ம்தேதி சனிக்கிழமை மாலை 6 மணி அளவில் காரைக்குடி ஐந்து விளக்கு திடலில் கண்டன பொதுக்கூட்டம் நடைபெறுகிறது.

முன்னாள் அமைச்சரும் இலக்கிய அணி புரவலருமான மு.தென்னவன் தலைமையில் காரைக்குடி மாநகர மேயரும் செயற்குழு உறுப்பினருமான சே.முத்துதுரை முன்னிலையில் நடைபெறுகிறது.

காரைக்குடி மாநகர செயலாளர் துணை மேயர் நா.குணசேகரன் வரவேற்றுப் பேசுகிறார்.ஒன்றிய அரசை கண்டித்து நடைபெறும் கண்டன பொதுக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் கூட்டுறவு துறை அமைச்சருமான கே.ஆர். பெரியகருப்பன், முன்னாள் ஒன்றிய இணை நிதி யமைச்சர்,எஸ்.எஸ்.பழனி மாணிக்கம், வழக்கறிஞர் இரா.மணிமுடி ஆகியோர் சிறப்புரை ஆற்றுகிறார்கள்.

இந்த கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேருர் கழக செயலாளர்கள், சார்புஅணிநிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொள்கிறார்கள்.

கூட்டத்திற்கான ஏற்பாடுகளை மாநகர செயலாளர் நா. குணசேகரன் தலைமையில்மாநகர கழக நிர்வாகிகள் செய்து வருகிறார்கள்.f



புதூர் ஊராட்சி ஒன்றியம், வாதலக்கரை கிராமத்தில் ஒன்றிய பொது நிதியிலிருந்து ரூ.10லட்சம் மதிப்பீட்டில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,சட்டமன்ற சட்ட விதிகள் ஆய்வு குழு தலைவர்,தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஜி.வி.மார்கண்டேயன் பார்வையிட்டு ஆய்வு செய்து பணியினை விரைந்து முடிப்பதற்கு அறிவுறுத்தினார்கள். மேலும் ஜெயலட்சுமி என்ற பெண் கலைஞரின் கனவு இல்லத் திட்டத்தின் கீழ் வீடு வேண்டுமென கோரிக்கை வைத்ததை தொடர்ந்து சட்டமன்ற உறுப்பினர் நேரில் சென்று வீட்டை பார்வையிட்டு பணி ஆணை வழங்குவதற்கு துறை சார்ந்த அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார்கள்.உடன் புதூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் செல்வராஜ்,புதூர் மத்திய ஒன்றிய செயலாளர் ராதாகிருஷ்ணன், தூத்துக்குடி வடக்கு மாவட்ட முன்னாள் இளைஞர் அணி துணை அமைப்பாளர் இம்மானுவேல் விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீதர் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.



பேரறிஞர் அண்ணாவின் 56 ம் ஆண்டு நினைவு நாளையொட்டி , சிவகாசி , திருத்தங்கல்லில் உள்ள பேரறிஞர் அண்ணாவின் சிலைக்கு மாநகர திமுகவினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். சிவகாசி மாநகர தி.மு.க. சார்பாக சிவகாசி, திருத்தங்கல்லில் உள்ள பேரறிஞர் அண்ணாவின் சிலைக்கு தி.மு.க. மாநகர செயலாளர் எஸ்.ஏ.உதயசூரியன் தலைமையில் திமுகவினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். முன்னதாக சிவகாசி திமுக கட்சி அலுவலகத்தில் இருந்து அண்ணா சிலை வரை மவுன ஊர்வலம் நடைபெற்றது நிகழ்ச்சிகளில் மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம், திருத்தங்கல் முன்னாள் நகர்மன்ற துணைத்தலைவர் பொன்சக்திவேல், பகுதி கழக செயலாளர்கள் காளிராஜன், அ.செல்வம், கருணாநிதி பாண்டியன், மாவட்ட கழக துணைச் செயலாளர் ராமமூர்த்தி, மாநகர தி.மு.க.கவுன்சிலர்கள் சேதுராமன், மாவட்ட கழகப் பிரதிநிதி ராஜேஷ் மற்றும் மக அணி நிர்வாகிகள், சார்பு நிர்வாகி கள் கலந்து கொண்டனர் . தொடர்ந்து அண்ணா நினைவு நாளை முன்னிட்டு சிவகாசி சிவன் கோயில் மற்றும் திருத்தங்கல் நின்ற நாராயணப்பெருமாள் கோயிலில் தமிழ்நாடு அரசு சார்பில் சிறப்பு வழிபாடும் பொது விருந்தும் நடைபெற்றது. பொது விருந்திற்கு மாநகர செயலாளர் எஸ்.ஏ.உதயசூரியன் ஏற்பாடு செய்திருந்தார்.




சிவகங்கை மாவட்டம் இளையான்குடி வடக்கு ஒன்றியத்தில் நடைபெற்ற பாகநிலை முகவர்கள் பி.எல்.சி கூட்டத்தில் மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி தமிழரசிரவிக்குமார் சிறப்புரையாற்றினார் .இதில் மானாமதுரை தொகுதி சட்டமன்ற பொறுப்பாளரும் மாநில விவசாய அணி துணைஅமைப்பாளருமான பி.ஆர்.என். போஸ் சிறப்புரையாற்றினார். முன்னாள் எம்.எல்.ஏ. சுப மதியரசன் மற்றும் பாகநிலை முகவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.




அறிஞர் அண்ணாவின் 56 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு சிவகாசி விஸ்வநாதசுவாமி திருக்கோவில் ( சிவன்கோயில் ) மற்றும் திருத்தங்கல் ஸ்ரீ நின்ற நாராயண பெருமாள் திருக்கோவிலிலும் ( பெருமாள் கோயில் ) சமபந்தி விருந்து நடைபெற்றது. சம்பந்தி விருந்தை தி.மு.க.மாநகர செயலாளர் உதயசூரியன் துவக்கி வைத்து விருந்தில் கலந்து கொண்டார் .

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ஜோலார்பேட்டை நா. மணி**

**பிப்ரவரி 6 (2013)**



வேலூர் மாவட்டம், ஜோலார்பேட்டை பேரூர் செயலாளர் மற்றும் நகரச் செயலாளராக 31 ஆண்டுகள் பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.

பேரூராட்சித் தலைவராக இரண்டு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்கள் நலப் பணிகளை மேற்கொண்டார்.

கழகம் அறிவித்த அனைத்து அறப்போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**